# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:153** **தேதி:-06.03.2017**

### ’தில் கோல் கே போல்’ புதிய திட்டம் அறிமுகம் மற்றும் சில செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

POST PAID முறையில் 599/- ரூபாய்க்கான புதிய திட்டம் ஒன்றை ”தில் கோல் கே போல்” என்ற பெயரில் BSNL அறிமுகம் செய்துள்ளது. இந்த திட்டத்தின் அடிப்படையில் இந்த சந்தாதாரர்கள் இந்தியாவில் உள்ள அனைத்து 22 தொலை தொடர்பு வட்டங்களிலும் ரோமிங்கில் உள்ள போதும் உச்ச வரம்பில்லாமல் பேசலாம். இத்துடன் ஒவ்வொரு மாதமும் 6 GB டேட்டாக்களை பயன்படுத்திக் கொள்ளலாம். நான்கு மாதங்களுக்கு இந்த திட்டம் பொருந்தும். மக்கள் மத்தியில் இந்த திட்டத்தை நாம் பிரபலப்படுத்த வேண்டும்.

**மாவட்ட ஆட்சியர் மற்றும் கவர்னர் மாளிகை நோக்கிய பேரணியின் போது மக்கள் மத்தியில் சக்தி வாய்ந்த பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும்**:- மார்ச் 9ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் கவர்னர் மாளிகை நோக்கிய பேரணி நடத்தி மகஜர் வழங்க வேண்டும் என அனைத்து சங்கங்கள் அறைகூவல் விட்டுள்ளன. மகஜர் வழங்குவதோடு மக்கள் மத்தியில் கீழ்கண்ட அம்சங்கங்களில் சக்தி வாய்ந்த பிரச்சாரம் மேற்கொள்ளவும் அந்த பேரணியை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

1) BSNLல் பங்கு விற்பனை மற்றும் கேந்திர விற்பனைக்கு எதிராக……
2) துணை டவர் நிறுவனம் மற்றும் BSNLஐ பலவீனப்படுத்தும் அரசின் இதர நடவடிக்கைகளுக்கு எதிராக….
3) அதிவேக டேட்டா சேவைகளை வழங்குவதற்கு தேவையான 4G ஸ்பெக்ட்ரத்தை BSNLக்கு உடனடியாக வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி…..
4) அரசாங்கமும் TRAI நிறுவனமும் ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்திற்கு வழங்கி வரும் முறையற்ற ஆதரவுகளுக்கு எதிராக….

மக்களைக் கவரும் வகையில் வாசகங்களுடன் கூடிய பேனர்கள், தட்டிகளை ஏந்தியும், துண்டறிக்கைகளை மக்கள் மத்தியில் விநியோகித்தும் பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும்.

**வார்தா புயலின் போது சென்னையை கைவிட்டு சென்ற தனியார் தொலை தொடர்பு நிறுவனங்கள்**:- என்ன நடக்கப் போகிறது என்பதை முன்னெச்சரிக்கையாக தெரிவித்த போதும் வார்தா புயலின் போது தனியார் தொலை தொடர்பு நிறுவனங்கள் சென்னையை கைவிட்டு விட்டு சென்று விட்டனர் என தமிழக அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது. புயல் வரும் என கணிக்கப்பட்ட பின் அவர்களிடம் போதுமான டீசலை கையிருப்பு வைத்திருக்க கேட்டுக் கொண்டதாக வருவாய் நிர்வாக ஆணையாளர் திரு K.சத்ய கோபால் தெரிவித்தார். மண்டல வானிலை ஆராய்ச்சி மையத்தில் தேசிய அறிவியல் தினத்தை ஒட்டி 28.02.2017 அன்று நடைபெற்ற ”வார்தா புயல்-பேரிடர் நிர்வாகம் மற்றும் மறு சீரமைப்பு திட்டங்கள்” என்ற தலைப்பில் உரையாற்றும் போது, “இதற்கான திட்டங்களை வைத்துக் கொள்ளும் படி கேட்டுக் கொண்டோம்; ஆனால் அவர்கள் தேவைக்கேற்ப செயல்படவில்லை” என்றார். மேலும் அவர்கள்

முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு வியாபார ரீதியான காரணங்கள் இருந்திருக்கலாம் என்றும் கூறினார்.

**தொலை தொடர்பு துறை செயலாளர் திரு J.S.தீபக் திடீர் மாற்றம்:-** தொலை தொடர்பு துறையின் செயலாளராக இருந்த திரு.J.S.தீபக் திடீரென மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் இந்த பகுதியில் இருந்து உடனடியாக மாற்றப்பட்டு வணிக துறையின் OFFICER ON SPECIAL DUTYஆக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் இவர் உலக வர்த்தக மையத்தின் இந்திய தூதராக செயல்படுவார் என அறிவிக்கப்பட்டிருந்தது. திரு தீபக் தற்போது பார்சிலோனாவில் நடைபெற்று வரும் சர்வதேச மொபைல் மாநாட்டில் கலந்துக் கொண்டுள்ளார். BSNL நிறுவனத்தை திரு தீபக் வலுவாக ஆதரித்து வருவதால் ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம் அவர் மீது வருத்தத்தில் இருந்தது.

அவசர கதியில் நடைபெற்ற திரு தீபக்கின் மாற்றம் ரிலையன்ஸ் ஜியோவின் நிறுவனர் முகேஷ் அம்பானிக்கு மோடி அரசாங்கத்தின் மீதுள்ள செல்வாக்கை எடுத்துக் காட்டுகிறது. "Welcome Offer" என்ற பெயரில் அந்த நிறுவனம் வழங்கிய சலுகைகளை வேறு பெயருடன் கூட 90 நாட்களுக்கு மேல் நீடிப்பது TRAI விதித்துள்ள ஒழுங்கு முறைகளை மீறிய செயலாகும். ஆனால் அதனை தடுத்து நிறுத்த TRAIக்கு உறுதி கிடையாது. இந்த சூழலில் 22.02.2017 அன்று கூடிய டெலிகாம் கமிஷன் கூட்டத்தில், அரசாங்கத்திற்கான வருவாய் பாதிக்கப்படக் கூடாது மற்றும் தொலைதொடர்பு சந்தையின் முறையான வளர்ச்சி பாதுகாக்கப்பட வேண்டும் என்ற முறையில் TRAI, தனது கடமையினை ஆற்ற வேண்டும் என கடிதம் எழுத முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவை டெலிகாம் கமிஷனின் தலைவர் என்ற முறையில் தீபக் TRAIக்கு தெரிவித்தார். இந்த நடவடிக்கை கண்டிப்பாக மோடி அரசாங்கத்திற்கு கோபத்தை ஏற்படுத்தி இருக்கும். அவர் பார்சிலோனாவில் ஒரு மாநாட்டில் கலந்துக் கொண்டிருக்கும் போதே அவர் தொலை தொடர்பு துறையின் செயலாளர் என்ற பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார். உலக வர்த்தக மையத்தின் நிரந்தர பிரதிநிதியாக J.S.தீபக் நியமிக்கப்பட்டுள்ளார் என அரசாங்கம் அறிவித்துள்ளது. எந்த ஒரு நோக்கமும் இல்லாமல் அவர் மாற்றப்பட்டுள்ளார் என வெளி உலகிற்கு காட்டுவதற்கான அறிவிப்பே இது. தற்போதுள்ள உலக வர்த்தக மையத்தின் நிரந்தர பிரதிநிதி மே மாதத்தில் தான் பணி ஓய்வு பெறுகிறார். எனவே அவரை அவசர அவசரமாக மாற்றுவதற்கான தேவை என்ன? அவர் வணிகத்துறையின் OSDஆக பணி நியமனம் செய்யப்பட காரணம் என்ன? அவர் பார்சிலொனா மாநாட்டில் இருந்து வந்தவுடன் அவர் தொலை தொடர்பு துறையின் செயலாளர் பொறுப்பை வேறு யாருக்காவது வழங்குவதை உறுதி செய்வதற்காகவே இந்த நடவடிக்கைகள். அரசாங்கத்தின் மீது முகேஷ் அம்பானியின் பிடி அவ்வளவு வலுவானது.

திரு J.S.தீபக் அவர்களை வலுக்கட்டாயமாக தொலை தொடர்பு துறை செயலாளர் பொறுப்பில் இருந்து விலக்கும் போது அடுத்து அந்த பொறுப்பிற்கு யார் என அறிவிக்கவில்லை. தகவல் தொழில் நுட்ப துறையின் செயலாளராக இருக்கும் திருமிகு அருணா சுந்தர்ராஜன் அவர்கள் கூடுதலாக இந்த பணியையும் கவனிப்பார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

**MTNL CMDஆக திரு P.K.புர்வார் நியமனம்:-** 02.03.2017 அன்று MTNLன் CMDஆக திரு P.K. புர்வார் நியமிக்கப்பட்டுள்ளார். அமைச்சரவையின் பதவி நியமனக்குழு அவரது பெயரை இந்த பதவிக்கு ஐந்தாண்டு காலத்திற்கு ஒப்புதல் வழங்கி உள்ளது. 31.05.2014 முதல் முழு நேர CMD இல்லாமல் இருந்த MTNL நிறுவனத்தில் தற்போது அவர் DIRECTOR(FIN)ஆக உள்ளார்.

**ஊழியர்களுக்கு அதிகமாக வழங்கப்பட்ட பணம்:-** ஊழியர்களுக்கு அதிகமாக வழங்கப்பட்ட பணத்தை பிடித்தம் செய்வது தொடர்பாக உச்ச நீதிமன்றம் வழங்கிய உத்தரவை நேரடியாக அமலாக்க வேண்டும் என்கிற DoP&Tயின் வழிகாட்டுதலின் அடிப்படையில் உத்தரவுகள் வெளியிட வேண்டும் என BSNL ஊழியர் சங்கத்தின் துணைப் பொது செயலாளர் தோழர் சுவபன் சக்கரவர்த்தி 03.03.2017 அன்று DTGM(Est) திருA.K.சிங் அவர்களை சந்தித்து விவாதித்தார். நிர்வாகம் இது தொடர்பாக விவாதித்து வருவதாகவும், நிதி இயக்குனரின் ஒப்புதலுக்கு பின் விரைவில் மாநிலங்களுக்கு இதற்கான வழிகாட்டுதல் கொடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

**யூனியன் வங்கியுடனான MOU-** BSNL ஊழியர்களுக்கு பல்வேறு கடன்களை வழங்குவதற்கான UNION BANK OF INDIA உடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் 31.12.2016உடன் காலாவதியாகி விட்டது. இதனை புதுப்பிக்க வேண்டும் என BSNLஊழியர் சங்கத்தின் சார்பில் GM(T&BFCI) வலியுறுத்தப்பட்டது. பல்வேறு விதமான கடன்களுக்கான வட்டியை குறைக்க வேண்டும் என நிர்வாகம் வங்கிக்கு கடிதம் எழுதியுள்ளது. அவர்கள் விவாதித்து தங்களின் முன்மொழிவை வழங்குவார்கள். விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் புதுப்பிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

**தேசியக் கவுன்சில் கூட்டம்:-** 35ஆவது தேசியக் கவுன்சில் கூட்டம் 17.03.2017 அன்று நடைபெறும் என அறிவிப்பு வெளியாகி உள்ளது. 7வது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல் நடைபெற்று சுமார் 10 மாதங்களுக்கு பின் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது. எனவே ஆய்படு பொருட்களுக்கான நீண்ட பட்டியல் ஊழியர் தரப்பின் சார்பாக வழங்கப்பட்டுள்ளது. அனைத்து ஆய்படு பொருட்களும் விவாதிக்க இயலவில்லை என்றால் தேசியக் கவுன்சிலின் மற்றுமொரு கூட்டம் விரைவில் நடத்த வேண்டுமென BSNL ஊழியர் சங்கம் கோரிக்கை வைத்துள்ளது. இதற்கு முன் 16.03.2017 அன்று மாலை 3 மணிக்கு தாதா கோஷ் பவனில் ஊழியர் தரப்பு உறுப்பினர்களின் கூட்டம் நடைபெறும்

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**